Sri MANAKULA VINAYAGAR
Medical college and Hospital
*Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry- 605107*

MANA - KURAL
*The official podcast of*

Name of Resource person: Dr.P,Sirpy

Podcast Title:
Medication error

Department:
Pharmacology (Pharmacovigilance committee)

Category: (Select relevant category)
Public awareness

## TRANSCRIPT

**அனைவருக்கும் வணக்கம்..... நான் Dr. பூ.சிற்பி, மருந்தியல் துறை முதுகலைப்பட்டதாரி ஸ்ரீ மணகுள விநாயகர் மருத்துவக் கல்லூரி & மருத்துவமனை, நான் மருந்து பிழைகள் என்ற தலைப்பில் உரையாட உள்ளேன்**

### மருந்து பிழைகள்

### மருந்து பிழைகள் என்றால் என்ன?

நோயாளிகள் தாங்கள் உட்கொள்ளும் மருந்துகளை சரியான மருத்துவ முறையில் உட்கொள்ளாமல் தங்களால் எளிதில் தவிர்க்க கூடிய பிழைகளால் ஏற்படும் மருத்துவ விளைவுகள்.

### ஏன் தெரிந்துக் கொள்ள வேண்டும்?

நமது நாட்டில் பெரும்பாலான பக்க விளைவுகள் மருந்துகளைச் சரியான மருத்துவ முறையில் கடைப்பிடிக்காதக் காரணத்தினால் ஏற்படுகின்றன. இவை சில நேரங்களில் தீவிரமடைந்து நோயுற்ற வாழ்விற்க்கும் மற்றும் நோயாளிகளின் உயிரிழப்பிற்க்கும் வழி வகுக்கிறது.

### பிழைகள் எவ்வாறு ஏற்படுகின்றன?

மருந்துகளின் காலாவதி தேதியை கண்டறியாமை.



Edit with WPS Office

சரியான கால அளவில் மருந்துகளை உட்கொள்ளாமை. உதாரணமாக நுண்ணுயிர்க் கொள்ளி எனப்படும் ஆன்டிபயாடிக் மாத்திரைகளை மருத்துவர்கள் ஐந்து நாட்கள் எடுத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தினால் தாங்கள் அந்தக் குறிப்பிட்டக் கால அளவில் அந்த மாத்திரைகளை எடுத்துக் கொள்ளாமல் பாதியிலேயே சிகிச்சையைக் கைவிடுவது.

சரியான அளவில் மருந்துகளை உட்கொள்ளாமை. உதாரணமாக காய்ச்சலுக்காக மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை தனக்கு காய்ச்சல் குறையவில்லையே என்று அந்த மாத்திரைகளை ஒரே நேரத்தில் இருமுறை உட்கொள்வது.

சரியான நேரத்தில் மருந்துகளை உட்கொள்ளாமை. உதாரணமாக மருத்துவர்கள் சில மாத்திரைகளை உணவு உண்பதற்க்கு முன் எடுத்து கொள்ளும்படி அறிவுறுத்தினால் அதனை அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் உட்கொள்ளாமை.

சரியான மருந்துகளை உட்கொள்ளாமை. உதாரணமாக மருந்தகத்திலிருந்துப் பெற்றுக் கொண்ட மாத்திரைகள் மருந்துச் சீட்டில் உள்ளதா என்றுச் சரிபார்த்துக் கொள்ளாமை.

முறையான பரிசோதனையின்றி மருந்துகளை உட்கொள்ளுதல். உதாரணமாக சக்கரை நோயாளிகள் மருந்துகளை எடுத்துக் கொண்டு இரண்டு மாதங்கள் சென்றுப் பரிசோதனைக்கு வரும்படி மருத்துவர் அறிவுறுத்தினால் அதனைப் பின்பற்றாமல் தொடர்ந்து மருந்துகளை உட்கொள்ளுதல்.

மருத்துவர்களின் அனுமதியின்றி மருந்துகளை உட்கொள்ளுதல்.

குறிப்பு : மேற்கண்ட மருந்து பிழைகளை தவிர்ப்பதன் மூலம் இப்பிழைகளினால் ஏற்படும் விளைவுகளையும் எளிதில் தவிர்க்கலாம்.

**உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்**

**றப்பானாற் கூற்றே மருந்து.**

- குறள் ,950

எனும் வள்ளுவரின் குறளுக்கு இணங்க நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து மற்றும் மருந்தை அங்கிருந்துக் கொடுப்பவன் என்று இந்த நாள்வரின் பங்கும் முறையான மருத்துவ சிகிச்சைக்கு வழி வகுக்கும்.

**----- வாழ்க நலமுடன் -----**

P. Sirpy
Signature of the Resource Person

M. 8hus 05/03/24
Signature of the HOD

Professor & Head
Pharmacology Department
SMVMCH, Kalitheerthalkuppam
Puducherry



Edit with WPS Office